இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
மட்டம் 05 – 2008/2009
**LWU 3312** – காணிச் சட்டம்
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - 2
காலம்: 40 நிமிடங்கள்

LIBRARY

திகதி 10.12.2008 நேரம்: மு.ப 11.30 – மு.ப 12.10

ஒரு வினாவிற்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "உரோமன் டச்சுச் சட்டத்திற்கு அமைய விற்பனையாளர், விற்பனை ஒப்பந்தம்வரை உள்ள வெளிப்படையான உத்தரவாதம் மற்றும் உறுதிப்படுத்துகைகளுக்கு புறம்பாக விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக சமாதானமான அனுபவிப்பினை கொள்வனவு செய்பவருக்கு உத்தரவாதமளிப்பது மாத்திரமன்றி மூன்றாம் திறத்தவர் அல்லது விற்பனையாளரினால் ஏற்படக்கூடிய எவ்வகையிலான இடையீடுகளில் இருந்தும் பாதுகாத்துக் கொடுப்பதற்கான மறைமுக உத்தவாதத்திற்கு உட்படுவார்."

பெரேரா எதிர் பெரேரா(1956)57 பு.ச.அ **440**

மேற்கண்ட கூற்றின் பின்னணியில் இலங்கையில் ***exceptio rei venditae et traditae*** கொள்கையின் பிரயோகத்தினை நுணுக்கமாக ஆராய்க.

2. பியால் கொழும்பில் ஆதன விற்பனை வியாபாரம் ஒன்றினைக் கொண்டு நடாத்துகின்றார். இவர் தனியார் சொந்தக்காரர்களிடம் இருந்து காணியைக் கொள்வனவு செய்வதுடன் ஆதனத்தினை அபிவிருத்தி செய்ததன் பின் அவற்றை மீள் விற்பனை செய்கின்றார். பியால் தனியார் வங்கிகளில் இருந்தும் கடன் வழங்குகின்ற ஏனைய ஸ்தாபனங்களில் இருந்தும் முதலீட்டுக் கடனாக பாரியளவு பணத்தினை பெற்று வியாபாரத்தினை கொண்டு நடார்த்துகின்றார். இக்கடன் கொடுக்கும் ஸ்தாபனங்கள் மற்றும் வங்கிகள் என்பன பியால் கொழும்பில் நன்கு அறியப்பட்ட வர்த்தகர் என்ற ரீதியில் எவ்வித பிணையமும் இல்லாது இந்த கடன்களை உறுதிப்படுத்தி வழங்கின. பியாலினுடைய வியாபாரம் விரைவாக வளர்ந்ததுடன் தமது மொத்த கடன் கடப்பாட்டின் 25% வரையில் முழுமையாக செலுத்தி முடிக்கும்வரை தொடர்ச்சியாக கடன் தவணைப்பணத்தினைச் செலுத்தினார். எவ்வாறாயினும் பியாலினது அதிகப்படியான வெளிநாட்டுப் பயணம் மற்றும் சூது நடவடிக்கைகளில் ஈடுபடும் பழக்கத்தினால் அவரது வியாபாரம் திடீரென சரியத்துவங்கியது. இதன் காரணமாக அவரின் கடன் தவணைப் பணத்தினை செலுத்தும் செயற்பாட்டில் பின்னடைவு ஏற்பட்டது. கடன் கொடுத்தோர் பியாலிற்கு செலுத்த வேண்டிய பணத்தொகை தொடர்பான அறிவித்தல்களை அனுப்பியதுடன் எஞ்சிய கடன் தொகை செலுத்தப்படாவிட்டால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கோரிக்கை கடிதங்களையும் (letter of demand) எழுதினர்.

கோரிக்கைக் கடிதங்களும், அறிவித்தல் கடிதங்களும் கிடைக்கப்பெற்ற பியால் தமக்கு எதிராக கடன்பெற்றோருக்கு எதிரான தீர்ப்பின் கட்டளையை, தமது கடன் கொடுத்தோர் பெறுவதனை தடுக்கும் முகமாக தமது எல்லா சொத்துக்களையும் மூன்றாம் திறத்தவருக்கு பராதீனப்படுத்தினார்.

பியாலினுடைய கடன் கொடுத்தோர் உம்மிடம் சட்ட ஆலோசனை கோருகின்றனர். இலங்கையில் ஆதனச் சட்டத்தின் கீழ் கடன்கொடுத்தோருக்கு கிடைக்கக்கூடிய உரிய சட்ட நிவாரணம் தொடர்பில் அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

(பதிப்புரிமையுடையது)